முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved

பரீட்சைத் திணைக்களம்- A PLUS CAMPUS
Exam Department - A PLUS CAMPUS
විභාග දෙපාර්තමේන්තුව - A PLUS CAMPUS

**தரம்-09 முதலாம் தவணைப் பரீட்சை , 2026**
**ශ්‍රේණිය-09 පළමු වාරය විභාගය, 2026**
**Grade-09 First Term Examination, 2026**

| | | |
|---|---|---|
| **தமிழ்** Tamil | சுட்டெண்/Index No:………………… | **இரண்டு மணித்தியாலம்** Two Hours |

பகுதி - **I**

ஒவ்வொரு வினாவிற்குமுரிய மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க

1. 'அகன் அமர்ந்து ஈதலின் நன்றே' - இங்கு ஈதல் என்பது.

    1 மனம் 2. ஏற்றல் 3. கொடுத்தல் 4. வாங்கல்

2. 'பொங்கிப் பெருகி வழிந்த பெரும் வெளிச்சத்தில் ……….' இங்கு வெளிச்சம் என்பதன் ஒத்தசொல்

    1. ஒலி 2. ஒளி 3. நிலவு 4. இருள்

3. 'கனவும் நினைவும் நிலையாகும்' கனவு என்பதன் எதிர்ச்சொல்

    1. நினைவு 2. நனவு 3. கற்பனை 4. மயககம்

4. 'நான் துன்பத்தையும் நம்பியதில்லை' துன்பம் என்பதன் எதிர்ப்பதம்

    1. இன்னல் 2 துயரம் 3. மகிழ்ச்சி 4. இன்பம்

5. பின்வரும் சொற்களுள் பொருளால் வேறுபட்ட சொல்

    1. கானகம் 2. ஆரணியம் 3. அக்கினி 4. அடவி

6. பின்வருவனவற்றுள் 'நகை' என்ற சொல் குறிக்காத பொருள்.

    1. ஆபரணம் 2. சிரிப்பு 3. இகழ்ச்சி 4. குளிர்ச்சி

7. வாழைக்குக் கச்சல் போல மாவிற்கு

    1. மூசு 2. வடு 3. பிஞ்சு 4. குரும்பை

8. மாணவ தலைவர்களைத் தெரிவு செய்வதற்கான 'இன்ரவியூ' நடைபெற்றது 'இன்ரவியூ' என்பதற்கு நிகரான தமிழ்க் கலைச்சொல்

    1. பரீட்சை 2. போட்டிப்பரீட்சை 3. நேர்முகத்தேர்வு 4. எழுத்துத்தேர்வு

9. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி எது?

    1. தகதக 2 இரவும் பகலும் 3 ஓடிஓடி 4. செக்கச்சிவந்த

10. மாணவர்கள் ……………….. மைதானத்தை வந்தடைந்தார்கள். கீறிட்ட இடத்திற்கு மிகப்பொருத்தமான அடுக்குத்தொடர்.

    1. வண்ண வண்ணமாக 2. பக்கம் பக்கமாக
    3 புதிது புதிதாக 4. வரிசை வரிசையாக

11. "வீட்டுக்கு வெள்ளை அடித்தான் " எவ்வகை ஆகுபெயர்

1. குணவாகுபெயர் 2. சினையாகுபெயர் 3. காலவாகுபெயர் 4. பொருளாகுபெயர்

12. வழமையாக நான் விமலுடன் பாடசாலைக்குச் செல்வேன்.

இன்று நான் கமலுடன் பாடசாலைக்குச் சென்றேன்.

இவ்வாக்கியங்களை இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச்சொல்.

1. ஆகவே 2 அதனால் 3 ஆனால் 4. எனவே

13. 'பப்பாளி விதை அளவு உடம்பு உடைய பூச்சி' என்பதில் கையாளப்பட்டுள்ள உவமையணியின் உவமானம் எது?

1. பப்பாளிவிதை 2. அளவு 3. உடம்பு 4. பூச்சி

14. பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயர் எது?

1. தொழிலாளி 2 மருத்துவம் 3 வானொலி 4 பயிற்சி

15. 'தாமரையைத் தலையில் சூடினாள்' என்பதில் தாமரை என்பது எவ்வகை ஆகுபெயர்

1. பொருளாகுபெயர் 2. சினையாகுபெயர்

3. குணவாகுபெயர் 4. காலவாகுபெயர்

16. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினைக்கு உதாரணமாக அமைவது.

1. படித்தாள் 2. வரைவாள் 3. சிரித்தாள் 4. உண்டான்

17. பின்வருவனவற்றுள் இடைச்சொல்லுடன் வினைச்சொல் சேர்ந்து ஆக்கப்பட்ட கூட்டுவினை எது?

1. அழுதது 2. பின்பற்றுவோம் 3. சொல்லிக்கொடுத்தான் 4. உத்தரவிடுவேன்

18. இதயம் அழுகிறது எனும் கவிதையின் ஆசிரியர்

1. அன்புமுகைதீன் 2. வித்துவான் பொன் முத்துகுமாரன்

3. டாக்கடர் எம்.எஸ் உதயமூர்த்தி 4. யோ.பெனடிக்பாலன்

19. எறும்புகள் உணவு சேகரிக்க கூட்டமாகச் செல்கின்றன. இதில் கூட்டமாக என்பது.

1. பெயரடைமொழி 2. வினையடைமொழி

3. செயப்படுபொருள் அடைமொழி 4. எழுவாய் அடைமொழி

20. எறும்புகளின் உடல் மூன்று பகுதிகளைக் கொண்டது. மேற்படி வாக்கியத்தின் எழுவாய்

1. எறும்பு 2. பகுதிகள் 3. கொண்டது 4. உடல்

(2 X 20 = 40 புள்ளிகள்)

APLUS CAMPUS

## பகுதி – II

எல்லா வினாக்களிற்கும் விடை தருக

01. பின்வரும் தலைப்புகளில் ஒன்றை தெரிவு செய்து 150 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை வரைக

1. நல்ல எண்ணங்களே உயர்வு தரும்

2. மலைநாட்டுச் சுற்றுலாவின் போது நீர் கண்ட காட்சிகளை வர்ணித்து எழுதுக

3. சுற்றுச்சூழலைப்பாதுகாப்போம்

4. வாசிப்பின் முக்கியத்துவம்

(15 புள்ளிகள்)

02. உமது பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி பற்றி நண்பனுக்கு 75 சொற்களில் கடிதம் எழுதுக

(10 புள்ளிகள்)

03. சுருக்கமான விடை தருக.

1. நல்லெண்ணத்தை தேர்ந்தெடுங்கள் என்ற கட்டுரையில் கட்டுரை ஆசிரியர் தாழ்த்தும் உணர்ச்சிகள் என எவற்றைக் கூறுகின்றார்?

2. உண்மைக்குப் பரிசு எனும் கதையில் கலீபா அடிக்கடி கூறிக் கொள்ளும் வாக்கியம் எது?

3. ஒரு சின்னஞ்சிறு பூச்சி எனும் கதையின் ஆசிரியர் யார்? எத்தொகுப்பில் அமைந்துள்ளது?

4. "இதயம் அழுகிறது" எனும் கவிதையில் ஆசிரியர் கற்பிக்கும்போது மாணவன் அலட்சியமாக இருக்கக் காரணம் என்ன எனக் கூறப்படுகின்றது?

5. யார் சிறந்தவர் எனும் பாட நூலில் ரோஜாவில் முள் இருப்பதற்கு கனகாம்பரம் கூறும் காரணம் என்ன?

6. நாட்டார் கதைகளில் உழைக்கும் குடும்பங்களின் சீதனப்பொருட்கள் எவை?

7. வேற்றுமை என்றால் என்ன?

8. அழைப்பிதழின் வகைகள் எவை?

9. ஆகு பெயர் என்றால் என்ன?

10. ஊன், ஊண், எனும் இரு சொற்களையும் பொருள் விளங்கக் கூடிய வகையில் தனித்தனி வாக்கியம் அமைக்குக.

(10 x 3 = 30 புள்ளிகள்)

04. பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்கு கூறப்பட்டது. என எழுதுக.

1. "இந்த மல்லிகை மொட்டுக்களைப் பறித்து அழகான இரு மாலைகள் தொடுத்து வை"

2. "உட்காருங்க, வாழைப்பழம் இப்ப வந்திடும் சாப்பிடலாம்"

(5 புள்ளிகள்)

APLUS CAMPUS